பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 09 புதன்கிழமை 23.03.2022 கதிர் 06

## இந்திய மீனவர்கள் 22 பேர் விடுதலை!

(எஸ்.நிதர்ஷன்)

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரு இழுவைப் படகுகளுடன் கைதான 22 இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள், ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்பட்டனர்.

☞2

## பதவி விலகுவாரா கோட்டாபய? இன்னமும் அறிவிக்கவில்லையாம்

### அமைச்சரவை இணைப்பேச்சாளர் கருத்து



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுவது தொடர்பில் அமைச்சரவைக்கு எதையும் அறிவிக்கவில்லை. அவரின் பதவிக் காலம் பற்றியும் கலந்துரையாடல் இடம்பெறவில்லை.

- இவ்வாறு அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார் .

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று

☞2

# பதவி துறக்கும் யோசனை கோட்டாபயவுக்கு இல்லை

### நெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டை அவர் மீட்டே தீருவார் என்கின்றார் பஸில்

இந்த நாட்டின் சிறந்த தலைவரே கோட்டாபய ராஜபக்ஷ. தற்போதைய நெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டை அவர் மீட்டே தீருவார். பதவி விலகும் எண்ணம் அவருக்கு இல்லை.

- இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப்

☞2



# மாநாட்டில் கடுப்பாகிய ரணில்; மன்னிப்புக் கோரிய கோட்டா!

### பஸிலிடமும் கேள்விக்கணைகள் தொடுப்பு



**நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த நிலைமைக்கு யார் பொறுப்புக் கூறவேண்டும் என்பது பற்றி ஆராய நாம் இங்கு வரவில்லை. அவ்வாறு ஆராய்ந்தால் வேறு பிரச்சினைகள் பற்றிக் கதைக்க முடியாது. இறுதியில் விஜய மன்னர் இங்கு வந்திருக்காவிட்டால் பிரச்சினை இருந்திருக்காது என்ற முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கும்.**

**- இவ்வாறு சர்வகட்சி மாநாட்டில் கடும் சீற்றத்தை வெளிப்படுத்தினார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க.**

☞2

## சர்வதேச நாணய நிதியத்தின் முழு அறிக்கை கிடைக்கவில்லை

### சர்வகட்சி மாநாட்டில் நிதி அமைச்சர் பதில்

இலங்கை தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் முழுமையான அறிக்கை எமக்கு இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

- இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இன்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டின்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டிய விடயம் தொடர்பில் பதில் அளிக்கையிலேயே நிதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அப்படியானால் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதியை அழைத்து விசாரிப்போம் என ரணில் விக்கிரமசிங்க இதன்போது குறிப்பிட்டார்.

☞2

## பட்டினியில் வாடும் மக்களுக்கு நிவாரணம் உடன் வழங்குங்கள்

### மாநாட்டில் சுமந்திரன் எம்.பி. கோரிக்கை

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான பொதுப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். பட்டினியில் வாடும் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

☞2



## ராஜபக்ஷ சகோதரர்களால் நான் ஓரங்கட்டப்பட்டேன்!



### பீ.பி.ஜயசுந்தர கவலை

ராஜபக்ஷசகோதரர்களுக்கு விசுவாசமாகச் செயற்பட்ட போதும் தான் ஓரங்கட்டப்பட்டுள்ளார் என்று

☞2

## 200 மில்லியன் டொலர் கடன் ஆசியிடம் இலங்கை கோரல்

இலங்கையில் பால்மா, பருப்பு மற்றும் உணவு உற்பத்திக்காக ஆஸ்திரேலியாவிடம் கடன் கோரப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன இக்கடனைக் கோரியுள்ளார்.

அதற்கமைய 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாகக் கோரப்பட்டுள்ளன.

## யாழில் நீதி கோரி கவனவீர்ப்புப் பேரணி




(எஸ். நிதர்ஷன்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நகரில் கவனவீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இன்று முற்பகல் 10 மணியளவில் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பித்த பேரணி, வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் முடிவடைந்தது.

அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி

☞2

## மாநாட்டில் கடுப்பாகிய ரணில்; ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இன்று சர்வகட்சி மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டைப் பிரதான எதிர்க்கட்சிகள் புறக்கணித்தாலும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் ரணில்விக்கிரமசிங்கபங்கேற்றிருந்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

நாடு தற்போது எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்கான வழிமுறைகள் பற்றி ஆராயவே நாம் இங்கு வந்தோம். மாறாக கட்சி அரசியலை முன்னெடுப்பதற்காக அல்ல. எனினும், குறுகிய அரசியல் நோக்கில், தற்போதைய நிலைமைக்கு கடந்த அரசுதான் பொறுப்பு என மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிடுகின்றார். அதற்கு என்னாலும் பதில் வழங்க முடியும். பிறகு அவர் கருத்து வெளியிடுவார். அதற்கு நான் பதில் வழங்குவேன். அப்படியானால் இந்தப் பிரச்சினையைப் பற்றி மட்டும்தான் பேச வேண்டியிருக்கும்.

இறுதியில் விஜய மன்னன் இங்கு வந்திருக்காவிட்டால் பிரச்சினை ஏற்பட்டிருக்காது என்ற முடிவுக்கும் வரக்கூடும். அதேபோல் எதிரணிகளைத் தோற்கடிக்க நாம் இங்குவரவில்லை. எதிர்காலத்தில் அவர்களையும் இணைத்துக்கொள்ளும் நோக்கில்தான் வந்துள்ளோம் - என்றார்.

அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

மத்திய வங்கி ஆளுநரின் அறிவிப்பு உங்களுக்குஏதேனும்மனவருத்தத்தை ஏற்படுத்தியிருந்தால் அதற்காக மன்னிப்புக் கோருகின்றோம். கடந்த கால நிலைவரம் பற்றியே அவர் கூறவிளைந்துள்ளார் என்றார்.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பிலும் ரணில் இதன்போது கருத்து வெளியிட்டார். நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் இது பற்றி கேள்விக்கணைகளைத் தொடுத்து விளக்கம் கோரினார் ரணில்.

## சர்வதேச நாணய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை, வரைவு நகல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதனை வழங்க முடியாது. முழுமையான அறிக்கையையே வெளியிட முடியும் என்று பஸில் பதில் அளித்தார்.

## பட்டினியில் வாடும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இன்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடியால், மக்கள் பட்டினியில் வாடும் நிலை உருவாகியுள்ளது. வடக்கில் இருந்து ஒரே நாளில் 16 பேர் தமிழகம் சென்றுள்ளனர். இந் நிலைமை தொடரக்கூடாது.

தற்போதைய நிலைமையில் இருந்து மீள்வதற்கான பொறிமுறை அவசியம். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் - என்றார்.

## ராஜபக்ஷ சகோதரர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

தான் வாழ்நாளின் பெரும்பகுதியை ராஜபக்ஷக்களுக்காக உழைத்த போதிலும் ஒரு தொலைபேசி அழைப்புக்கூட அவர்களிடமிருந்து வருவதில்லை என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதும், உடனடியாக ஜனாதிபதி செயலாளர் பதவிக்கு பீ.பி.ஜயசுந்தர நியமிக்கப்பட்டார்.

சில காலம் நிதி அமைச்சின் செயலாளராகவும் இருந்த அவர், ஏற்கனவே நாட்டில் சர்ச்சைக்குரிய நபராக இருந்தார். எனினும், 2 ஆண்டுகள்நிறைவடையும்போது பல பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொண்டவர் இறுதியில் தனது பதவியை இராஜிநாமா செய்துகொண்டார்.

ஜனவரி மாதம் அவர் ஓய்வுபெற்றார். ஊடகங்களில் அதிகம் பேசப்பட்ட ஜயசுந்தர, ஓய்வின் பின்னர் அனைவராலும் மறக்கப்பட்ட நபராக மாறியுள்ளார்.

இந்தநிலையில், அண்மையில் அரசின் உயர் அதிகாரி ஒருவரைச் சந்தித்த அவர் சில தகவல்களை வெளியிட்டுள்ளார்.

நான் எனது 40 வருட சேவை காலத்தில் பெரும்பகுதி ராஜபக்ஷக்களுக்காக உழைத்துள்ளேன். ஆனால், நான் ஓய்வுபெற்ற பின்னர் எவரும் என்னைக் கண்டுகொள்ளவில்லை. தொலைபேசி அழைப்பேற்படுத்தி எனக்கு நன்றி சொல்லவில்லை. ஒருவரும் என்னிடம் பேசவில்லை என்று விரக்தியுடன் உயர் அதிகாரியிடம் அவர் கூறியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

## யாழில் நீதி கோரி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும், காணிகளை விடுவியுங்கள், இந்திய இழுவைமடிப் படகுகளைத் தடுத்துநிறுத்துபோன்றகோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

## பதவி துறக்கும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவி விலகுமாறு எதிர்க்கட்சிகளும், எதிர்க்கட்சிகளின் ஆதரவாளர்களுமே கோருகின்றனர். ஜனாதிபதிக்கு ஆணை வழங்கிய மக்கள் எவரும் அவரைப் பதவி விலகுமாறு கோரவில்லை.

இதேவேளை, ராஜபக்ஷ சகோதரர்களுக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் சில ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றன. அந்த ஊடகங்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

உண்மைச் செய்திகளை வெளியிட்டால் அவற்றை நாம் வரவேற்போம். அதைவிடுத்துப் போலிச் செய்திகளை வெளியிட்டு மக்களைக் குழப்ப வேண்டாம்.

இந்த நாட்டை முன்னேற்ற ராஜபக்ஷ சகோதரர்கள் ஓரணியில் பயணிக்கின்றனர். எமது பயணம் வெற்றியடைய ஆளுந்தரப்பில் உள்ள அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர் - என்றார்.

## பதவி விலகுவாரா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது

இதன்போது, 'ஜனாதிபதி பதவி விலக வேண்டும் எனப் பல தரப்பினரும் கோரி வருகின்றனர். எனவே, ஜனாதிபதியின் பதவிக் காலம் பற்றி அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டதா அல்லது தான் பதவி விலகுவது தொடர்பில் ஜனாதிபதி அமைச்சரவைக்கு ஏதேனும் தெரியப்படுத்தினாரா?' என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவ்வாறு எதுவும் கலந்துரையாடப்படவில்லை. அப்படியான கோரிக்கை விடுக்கப்பட்டு வருவது தொடர்பிலும் எனக்கு எதுவும் தெரியாது - என்றார்.

## இந்திய மீனவர்கள் ......



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது நீரியல் வளத்துறை அதிகாரி களால் சந்தேகநபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம்தாக்கல்செய்யப்பட்டது.

01) இலங்கை எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டமை.

02) நீரியல் வளப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிப்பத்திரமின்றி மீன்பிடியில் ஈடுபட்டமை. கைதுசெய்யும் வேளையிலும் வலைகளைத் தொடக்கறுத்து வைக்காமை.

03) தடைசெய்யப்பட்ட இழுவைமடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டமை.

- ஆகிய 3 குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்கை விசாரித்த நீதிவான் மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் தலா ஆறு மாதம் சாதாரண சிறைத் தண்டனையை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்து நிபந்தனையின் அடிப்படையில் 22 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்து உத்தரவிட்டார்.

ENGLISH CLASSES

யாழ் நகரில் தனி வகுப்புகள் A/L எடுத்தவர்கள் பெறுபேறுகள் வரமுன் தரமாக பேசும் எழுதும் ஆற்றலை வழங்கும் துரித வகுப்புகள்
G.G.E. O/L - English Literature
Grade 10 & 11 தனி வகுப்புகள்
Language தரமும்
திருத்தப்படும்.



K.Ganesh B.A . 077 7668725

சபரிமலை
ஸ்ரீ ஐயப்பன் றேடர்ஸ்
Sabarimalai Sri Iyappan Traders
இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.
No. 315, Kandy Road, Kilinochchi.
Tel:- 021 228 3701,076 307 8091




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்
077 986 2476 - 077 983 8091 எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.
076 307 8091, 021 228 3701, 077 986 2470

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காட்டுச் சட்டத்துக்குப் பட்டுக் குஞ்சம்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் மிகக் காத்திரமானவை என நேற்று நாடாளுமன்றத்தில்த்திருத்தங்கள் தொடர்பான சட்டமூல விவாதத்தை முடித்து வைத்துப் பேசிய நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருக்கின்றார்.

ஆனால், இத்திருத்தங்கள் தொடர்பில் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எழுப்பிய நியாயமான கேள்விகளுக்கு அவர் பதில் அளிக்கவே இல்லை.

இந்தச் சட்டத்தின் கீழ் கைதாவோரின் தடுப்புக்காவல் கால எல்லையை 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களுக்குக் குறைத்துள்ளோம் என்று குறிப்பிட்டு, அதைப் பெரிய விடயமாக காட்ட முற்பட்ட நீதி அமைச்சர் பீரிஸ், அது தொடர்பில் சுமந்திரன் எம்.பி. எழுப்பிய ஒரு கேள்விக்கு பதில் சொல்லாமல் நழுவிவிட்டார்.

தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் 18 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்ட எவராவது, அந்த 18 மாத காலக்கெடு முடிவடைந்த காரணத்தினால் முன்னர் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்களா என்று ஒரு கேள்வியை சுமந்திரன் எழுப்பியிருந்தார்.

முன்னர், ஆரம்பத்தில் 18 மாத கால தடுப்புக்காவல் முடிந்ததும் அவரை ஒரு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துவார்கள். அவருக்கு எதிரான வழக்கு விசாரணை முடிவுறுத்தப்படும் வரை அவரை விளக்கமறியலில் வைக்கும் உத்தரவை நீதிமன்றம் வழங்கவேண்டும் என்பதுதான் இந்தக் கொடூரச் சட்டத்தின் திட்டவட்டமான ஒழுங்கு. எனவே, 18 மாத காலத் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் மறியல் முடிந்து, தொடர்ந்து 18 வருடங்கள் கழிந்தும், நீதிமன்ற விசாரணை முடிவடையவில்லை என்ற பெயரில், தடுத்து வைத்திருக்கும் நிலைப்பாடுதான் நடைமுறையில் தொடர்கின்றது. இப்போது இந்தச் சட்டத் திருத்தம் காரணமாக 18 மாதத்திற்கு பதிலாக, 12 மாதத்தின் பின்னர் நீதிமன்றம் மூலமான விளக்கமறியல் தொடர போகின்றது.

ஆக, கைதி ஒருவரை பொறுத்தவரை 18 மாத கால தடுப்புக் காவல் உத்தரவின் கீழான கைதி என்ற நிலையில் இருந்து காலாகாலமாக விளக்கமறியல் – அல்லது விசாரணை – கைதி என்ற நிலைக்குப் பெயர் மாற்றம் நடப்பது இனிமேல் 12 மாதத்தில் வரப்போகின்றது. அவ்வளவுதான். ஆனால் சிறை வாழ்க்கை தொடரவே செய்யும். அதை இந்தத் திருத்தம் எந்த வகையிலும் மாற்றவில்லை. வழக்கு விசாரணை முடிவடையும் வரை சிறைவாசம் என்ற கொடூரம் பல தசாப்தங்கள் கடந்தும் தொடரும் மிருகத்தனமான தண்டனை முறையை இந்தத் திருத்தம் மாற்றவே இல்லை என்பது கண்கூடு. அதேபோல தடுப்புக் காவலில் இருக்கையில் சித்திரவதை செய்து, அச்சுறுத்தி, கைதியின் ஒப்பத்தைப் பெற்று, அதன் மூலம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை தயார் பண்ணி, அதை மட்டுமே ஆதார சாட்சியமாக வைத்து அந்த கைதிக்கு கொடூரத் தண்டனை விதிக்கும் காட்டுமிராண்டித்தனமான அநீதி முறைமை இந்தச் சட்டத்திலிருந்து விலக்கப்படவில்லை. இத்திருத்தத்தில் முதல் தடவையாக பிணை வழங்குவது குறித்து பிரஸ்தாபிக்கப் பட்டாலும், அது கூட தெளிவானதாக இல்லை. மேல்நிலை நீதிமன்றமான மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணை வழங்கிய ஒருவரை, அதனிலும் கீழான – கீழ்நிலை நீதிமன்றமான – மேல் நீதிமன்றம் தொடர்ந்து விளக்குமறியலில் வைக்க உத்தரவிட முடியும் என்ற குழப்பம் கூட இந்தச் சட்டத் திருத்தத்தில் உண்டு.

மொத்தத்தில், கேடுகெட்ட காட்டுச் சட்டத்திற்கு பட்டுக் குஞ்சம் கட்டிய கதைதான் இந்த திருத்தச் சட்டம்.

## எரிபொருள் தட்டுப்பாட்டால் யாழில் கடற்தொழிலாளர்கள் கடும் பாதிப்பு!

### வடமாகாண மீனவர் சமாச தலைவர் அன்னராசா வேதனை

ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம், மார்ச்.23

7 ஆயிரத்து 600 படகுகள் இருக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஆயிரம் படகுகள்கூட கடலிற்கு செல்ல முடியாத அவலமே காணப்படுகின்றது என வடக்கு மாகாண மீனவர் சமசமயக் தலைவர் அன்னராசா தெரிவித்தார்.

இலங்கையில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக மீனவர்களால் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதன் காரணமாக வடக்கு மாகாணம் முழுமையாகவே இந்த அவலம் காணப்பட்டாலும் உடனடியாக கையில் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் குடாநாட்டில் கடந்த வாரம் ஆயிரம் படகுகள்கூட தொழிலிற்குச் செல்லவில்லை.

இந்த விடயத்தை திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றபோது மீனவர்களுக்கு 40 லீற்றர் வழங்கப்படும் என்றனர். நாள் ஒன்றுக்கு 40 லீற்றர் வழங்கப்படும் என நாம் எண்ணினோம். அவ்வாறு அன்றி வரும் நாள்களில் 40 லீற்றர் எனில் அது ஒரு வாரமோ அல்லது அதற்கும் மேலாகுமா என்பதும் தெரியவில்லை.

கடற்தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 40 லீற்றர் தேவைப்படும் நிலைமையில் குறைந்தபட்சம் வாரத்துக்கு இரு நாள்கள் என்ற அடிப்படையில் தலா 40 லீற்றர் எரிபொருளேனும் வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

## எரிபொருள்களுக்காக வவுனியாவிலும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பு!



வவுனியாவில் மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்வதற்காக விவசாயிகளும் இல்லத்தரசிகளும் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலையை அவதானிக்க முடிந்தது.

வவுனியாவில் இரு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலேயே நேற்று (செவ்வாய்க்கிழமை) மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வரும் நிலையில் ஓர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குடும்ப உறுப்பினர்கள் உள்ள அட்டைக்கு மாத்திரம் 1,000 ரூபாவுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும் எனவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் மற் றைய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 500 ரூபாவுக்கு மாத்திரமே எரிபொருள் வழங்கப் பட்டு வருகின்றது.

இதேவேளை, டீசலை பெற்றுக்கொள்வதற்காகவும் நீண்ட வரிசையில் வாகனங்கள் பல மணி நேரமாக காத்திருக்கும் நிலையையும் அவதானிக்க முடிந்தது.

## எரிவாயுவுக்காக 4 மணித்தியாலங்கள் மட்டக்களப்பில் காத்திருந்த மக்கள்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிவாயு மற்றும் டீசல் ஆகியனவற்றை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் நீண்ட வரிசையில் நிற்கவேண்டிய நிலையுள்ளதுடன் தொடர்ச்சியாக எரிவாயு மற்றும் டீசல் விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக டீசல் வழங்கும் பணிகள் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றன.

இராணுவத்தின் பாதுகாப்புடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையங் களில் நீண்ட வரிசைகளில் வாகனங்கள் நின்று எரிபொருளைப்பெறவேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதேநேரம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மட்டக்களப்பு நகரின் பயனியர் வீதியில் எரிவாயு விநியோக நடவடிக்கை நடைபெறும் மக்களுக்கு கிடைத்த அநாமதேய தகவல்கள் காரணமாக பெருமளவான மக்கள் அப்பகுதியில் கூடியமையால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. மேற்படி வீதியில் முந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் நீண்ட வரிசையில் எரிவாயு சிலிண்டருடன் நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் நின்ற நிலையில் எரிவாயு விநியோகம் நடைபெறாத காரணத்தால் அங்கிருந்து கலைந்துசென்றனர்.

இன்று அந்தப்பகுதியில் எரிவாயு விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படும் என மாவட்ட எரிவாயு விநியோகஸ்தர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிவாயு இல்லாத காரணத்தால் பல உணவகங்கள் மற்றும் சிறிய தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாகன வருமானவரி பத்திரம் வழங்கும் செயற்பாடு மந்தம்

*நாடளாவிய ரீதியில் வாகன வருமான பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் மந்தமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

*கணினி அமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இவ்வாறு இந்த நடவடிக்கைகள் மந்தமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மரியுபோல் நகரில் ரஷ்ய போர் விமானங்கள் 'சூப்பர் பவர்' குண்டுகள் வீசி கடும் தாக்குதல்



உக்ரைனில் கடந்த 5 நாள்களில் 5 நிமிடத்துக்கு ஒருமுறை ரஷ்ய போர் விமானங்கள் மரியுபோல் நகர் மீது பறந்து சென்று குண்டுகளை வீசுகிறது.

உக்ரைன் மீது ரஷ்ய படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இன்று இது 28 ஆவது நாளாக நீடிக்கிறது.

வான்வெளி, தரைவழி தாக்குதல் மட்டுமின்றி கடல் வழியாகவும் கடுமையான தாக்குதல் நடத்தி வருகிறது. இருந்த போதிலும் ரஷ்ய படைகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் உக்ரைன் வீரர்களும் எதிர்த்து போராடி வருகின்றனர்.

உக்ரைன் நகரங்கள் மீது கடந்த 24 மணி நேரத்தில் 300இற்கும் மேற்பட்ட ஏவுகணை தாக்குதல்கள் நடந்து இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைனில் முக்கிய நகரங்களை பிடிக்க ரஷ்யா கடும் போராட்டம் நடத்தி வருகிறது.

துறைமுக நகரான மரியுபோல் மீது ரஷ்ய போர் கப்பல்கள் கடந்த 3 வாரங்களாக தாக்குதலை நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக அதிக சேதத்தை ஏற்படுத்தக் கூடிய சூப்பர் பவர் வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருவதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

மேலும் ரஷ்யாவின் போர் விமானங்கள் அலை அலையாக பறந்து சென்று வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருகிறது.

கடந்த 5 நாள்களில் 5 நிமிடத்துக்கு ஒருமுறை ரஷ்ய போர் விமானங்கள் மரியுபோல் நகர் மீது பறந்து சென்று குண்டுகளை வீசுகிறது.

குடியிருப்பு கட்டடங்கள் மட்டுமல்லாமல் மழலையர் பள்ளிகள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள் மீது ரஷ்யா தனது உக்கிரத்தனமான தாக்குதலை நடத்தி வருகிறது. இதனால் கட்டிடங்கள் அனைத்தும் சின்னாபின்னமாகி எலும்புக்கூடு போல் காட்சி அளிக்கிறது. நகர் முழுவதும் ரோடுகள் வெறிச்சோடி காணப்படுகின்றன.

தெருவுக்கு தெரு துப்பாக்கி சண்டை நடந்து வருகின்றன. எந்த நேரமும் குண்டுகள் வெடிக்கும் சத்தம் கேட்டு கொண்டே இருப்பதால் பொதுமக்கள் அச்சத்துடன் இருந்து வருகின்றனர்.

கடும் சண்டைகளுக்கு மத்தியில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் ஆபத்தை உணராமல் வாகனங்கள் மூலம் தப்பிச் செல்ல முயன்று வருகின்றனர்.

1,100 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வீதிகளில் உயிரற்று கிடக்கும் பிணங்களை தாண்டி தப்பித்த வண்ணம் உள்ளனர். உடல்கள் அகற்றப்படாமல் வீதிகளிலேயே கிடக்கிறது.

மரியுபோல் நகரம் குண்டு வீச்சால் கடும் சேதத்தை சந்தித்து உள்ளது. தகவல் தொடர்பு அனைத்தும் முற்றிலும் முடங்கிப் போய் உள்ளன.

குடிநீர், மின்சார இணைப்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டு விட்டன. இதனால் மரியுபோல் நகரில் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் குடிநீர் கிடைக்காமல், மின்சாரம் இல்லாமல் சிரமப்பட்டு வருகின்றனர்.

உணவு பற்றாக்குறை கடுமையாக நிலவி வருகிறது. உணவு பொருள்கள் கிடைக்காமல் குழந்தைகள், பொதுமக்கள் பரிதவிக்கின்றனர். செஞ்சிலுவை சங்கத்தினர், தன்னார்வலர்கள் அவர்களுக்கு உதவ முன் வந்தபோதிலும் அவர்களால் பொதுமக்கள் தங்கி இருக்கும் இடங்களுக்குச் செல்ல முடியவில்லை. உணவு கிடைக்காமல் ஏராளமானோர் பட்டினி கிடக்கின்றனர்.

மரியுபோல் நகரம் மீது மும்முனை தாக்குதலை ரஷ்ய படைகள் நடத்தி வருவதால் 24 மணி நேரமும் பொதுமக்கள் அப்பகுதியில் இருந்து வருகின்றனர்.



# தைவானில் நிலநடுக்கம் புதிய பாலம் இடிந்தது

தைவானில் இன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால் புதிதாக கட்டப்பட்டு வரும் பாலம் இடிந்தது. இதில் ஒருவர் காயமடைந்தார்.


தைவான் தலைநகர் தைபேயில் இருந்து சுமார் 182 கிலோ மீற்றர் தூரத்தில் இன்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதனால் கட்டிடங்கள், வீடுகள் குலுங்கின. அப்போது பொதுமக்கள் அயர்ந்துதூங்கிக்கொண்டிருந்தனர்.

நில அதிர்வை உணர்ந்த அவர்கள் திடுக்கிட்டு எழுந்தனர். ரிக்டர் அளவு கோலில் இந்த நிலநடுக்கம் 6.7 ஆக பதிவாகி இருந்தது.

இந்த நில நடுக்கத்தால் புதிதாக கட்டப்பட்டு வரும் பாலம் இடிந்தது. இதில் ஒருவர் காயம் அடைந்தார். உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

# புடினுக்கு நேட்டோ நாடுகள் பயப்படுகின்றன உக்ரைன் அதிபர் குற்றச்சாட்டு



புடினுக்கு நேட்டோ நாடுகள் பயப்படுகின்றன. உக்ரைனை ஏற்கிறோம். ரஷ்யாவுக்கு பயந்து ஏற்க மாட்டோம் என்ற உண்மையை நேட்டோ அமைப்புகள் உடனே வெளிப்படையாக கூற வேண்டும்.

ரஷ்ய அதிபர் புடினுடன் பேச்சு நடத்தாமல் போர் நிறுத்தத்திற்கு சாத்தியமே இல்லை. வெறுமனே பேச்சு நீடித்துக் கொண்டே செல்வதால் எந்த பயனும் இல்லை.

புடினுக்கு நேட்டோ நாடுகள் பயப்படுகின்றன. உக்ரைனை ஏற்கிறோம். ரஷ்யாவுக்கு பயந்து ஏற்க மாட்டோம் என்ற உண்மையை நேட்டோ அமைப்புகள் உடனே வெளிப்படையாக கூற வேண்டும்.

நேற்று மட்டும் 7 ஆயிரம் பொதுமக்கள் மரியுபோல் நகரில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

1 லட்சம் பேர் உணவு, குடிநீர், மருந்து வசதிகள் இல்லாமல் தவித்து வருகின்றனர்.

# ஆப்கானிஸ்தானில் 7 மாதங்களுக்கு பிறகு பள்ளிகளுக்கு திரும்பிய மாணவிகள்



2 மாதங்களுக்கு பின்னர் 12 வயதுக்கு கீழ் உள்ள சிறுவர் மற்றும் சிறுமிகள் பள்ளிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானை கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் தலிபான்கள்கைப்பற்றினார்கள்.

இதையடுத்து பெண்கள் மற்றும் மாணவிகளுக்கு எதிராக பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. கொரோனாப் பரவல் காரணமாக பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டன. 2 மாதங்களுக்கு பின்னர் 12 வயதுக்கு கீழ் உள்ள சிறுவர் மற்றும் சிறுமிகள் பள்ளிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில் 7 மாதங்களுக்கு பிறகு தலைநகர் காபூல் மற்றும் பல மாகாணங்களில் இன்று பெண்கள் பள்ளிகள் திறக்கப்பட்டன. 12 முதல் 19 வயதுக்குட்பட்ட மாணவிகள் இன்று பள்ளிக்கு திரும்பினார்கள்.



# இங்கிலாந்து இளவரசர் உக்ரைனுக்கு ஆதரவு

பெலீஸ் நாட்டு தலைநகர் பெல்மோபனில் உள்ள இங்கிலாந்து ராணுவ பயிற்சி மையத்துக்கு இளவரசர் வில்லியம் நேரில் சென்று ராணுவ வீரர்களுடன் கலந்துரையாடினார்.

இங்கிலாந்து இளவரசர் வில்லியம், இளவரசி கதே ஆகிய இருவரும் கரீபியன் நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக நேற்று அவர்கள் பெலீஸ் நாட்டுக்குச் சென்றனர். அங்கு தலைநகர் பெல்மோபனில் உள்ள இங்கிலாந்து ராணுவ பயிற்சி மையத்துக்கு இளவரசர் வில்லியம் நேரில் சென்று ராணுவ வீரர்களுடன் கலந்துரையாடினார். அப்போது, அவர் ரஷ்யாவின் உக்கிரமான போரை எதிர்கொண்டு வரும் உக்ரைனுக்கு மரியாதை செலுத்தினார்.

அங்கு பேசிய அவர், உக்ரைனை பாதுகாக்க போராடி வரும் ராணுவ வீரர்கள் மற்றும் அந்த நாட்டு மக்களுடன் தான் ஒன்றாக துணை நிற்பேன் என கூறினார். மேலும் ஜனநாயகத்தை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்ததுடன், உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை கண்டிக்கும் நாடுகளுடன் பெலீஸ் இணைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# எந்தச் சட்டத்தின் அடிப்படையில் பிணை வழங்க முடியும்? நளினியின் வழக்கறிஞரிடம் உயர்நீதிமன்றம் கேள்வி



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், தண்டனை கைதியாக உள்ள நளினிக்கு எந்தச் சட்டத்தின் அடிப்படையில் பிணைவழங்க முடியும்? என சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதிகளாக உள்ள நளினி, முருகன் உட்பட ஏழு பேரை விடுதலை செய்வது தொடர்பாக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றிய முந்தைய அ.தி.மு.க அரசு, அதை ஆளுநருக்குஅனுப்பி வைத்திருந்தது. நீண்டகாலமாக அந்த தீர்மானத்தின் மீது ஆளுநர் முடிவெடுக்காமல் இருந்தமையால், ஆளுநரின் ஒப்புதலுக்காக காத்திருக்காமல் தன்னை முன்கூட்டி விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

கடந்த முறை இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, சக கைதியான பேரறிவாளன் மனு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது. அந்த வழக்கில் முடிவு காணப்பட்டபின் இந்த வழக்கைவிசாரணைக்கு எடுக்கலாம் என தலைமை நீதிபதி அமர்வு தெரிவித்திருந்தது. நேற்று இந்த வழக்கு மீண்டும் தலைமை நீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, தமிழக அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம், பேரறிவாளனுக்கு உச்ச நீதிமன்றம் பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளதாக கூறி உத்தரவு நகலை சமர்ப்பித்தார். நளினி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ராதா கிருஷ்ணன், உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் பிணை கோரி மனுத் தாக்கல் செய்துள்ளார் என குறிப்பிட்டார்.

இதையடுத்து, எந்த மேல் முறையீட்டு வழக்கும் நிலுவையில் இல்லாத நிலையில் எந்த சட்டப்பிரிவின் கீழ் பிணை கோர முடியும்? என நளினி தரப்புக்கு கேள்வி எழுப்பிய தலைமை நீதிபதி, குற்ற விசாரணை முறைச்சட்டத்தின்படி, முன் பிணை கோரலாம், கைது செய்யப்பட்டால் பிணை கோரலாம், தண்டிக்கப்பட்டால், தண்டனையை நிறுத்தி வைத்து பிணை கோரலாம், ஆனால், மேல் முறையீட்டு வழக்கு ஏதும் இல்லாத நிலையில் எந்த அடிப்படையில் பிணை கோர முடியும்? என்று வினவினார். உச்ச நீதிமன்றம் அனைத்து நீதிமன்றங்களுக்கும் மேலானது எனவும், உயர் நீதிமன்றத்தால் பிணை வழங்க முடியாது எனவும் கூறிய தலைமை நீதிபதி, மனுதாரர் பிணை கோரி உச்சநீதிமன்றத்தைத்தான் அணுக முடியும் எனவும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்டமல்ல எனவும் தெரிவித்துள்ளார். பின்னர், நளினி தரப்பு வழக்கறிஞரின் கோரிக்கையை ஏற்று மனு மீதான விசாரணையை மார்ச் 24 ஆம் திகதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

## தடை செய்யப்பட்ட நெகிழிப்பொருள்களின் விற்பனை தொடர்கின்ற கடைகளுக்குத் தமிழக அரசு பூட்டு



தடை செய்யப்பட்ட நெகிழிப் பொருள்களைப் பயன்படுத்துவதை நிறுத்தாத கடைகளுக்கு சீல் வைக்க முடிவு செய்துள்ளதாக தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 14 வகையான நெகிழிப் பொருள்களுக்கு தடை விதித்து தமிழக அரசு ஆணை பிறப்பித்தது. இந்த அரசாணையை எதிர்த்து தமிழ்நாடு மற்றும் புதுவை பிளாஸ்டிக் உற்பத்தியாளர் சங்கம் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. அந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், நெகிழி மீதான தடை செல்லும் என தீர்ப்பளித்திருந்தது.

இந்த உத்தரவை மறு ஆய்வு செய்யக்கோரி தொடரப்பட்ட வழக்குகள் நீதிபதிகள் எஸ்.வைத்தியநாதன் மற்றும் பி.டி.ஆர் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் மீண்டும் விசாரணைக்கு வந்தன. அப்போது தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், தடை செய்யப்பட்ட நெகிழிப் பொருள்களை பயன்படுத்தியதாக 36 லட்ச ரூபா அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளதாகவும் தடை செய்யப்பட்ட நெகிழிப் பொருள்களை உற்பத்தி செய்தது என 167 நிறுவனங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முதல் சோதனையில் சிறு வணிக நிறுவனங்கள் நெகிழி பொருள்களைப் பயன்படுத்துவது கண்டறியப்பட்டதால் தற்போது அபராதம் விதிக்கப்படுவதாகவும், நெகிழி பொருள்களை பயன்படுத்தப்படுத்துவதை நிறுத்தா விட்டால், அந்த கடைகளுக்கு சீல் வைக்க முடி வெடுக்கப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், தடை செய்யப்பட்ட நெகிழிப் பொருள்கள் பயன்படுத்து வதை முற்றிலுமாக தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன என தெரிவிக்கப்பட்டது.

தடை செய்யப்பட்ட நெகிழிப் பொருள்களை தயாரிக்கும் நிறுவனங்களுக்கு சீல் வைக்கப்படுவதாக கூறினாலும் அவை தொடர்ந்து கிடைப்பதாக தெரிவித்த நீதிபதிகள், அண்டை மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்குள் நெகிழிப் பொருள்கள் வருவதை முழுமையாக தடுக்கும் வகையில் எல்லைகளில் சோதனையை தீவிரப்படுத்த வேண்டுமென அறிவுறுத்தினர்.

அத்தோடு, நெகிழிப் பொருள்களை பயன்படுத்தக்கூடாது என்ற விழிப்புணர்வை வீடுகளில் இருந்தே தொடங்க வேண்டுமென தெரிவித்த நீதிபதிகள், தடை செய்யப்பட்ட நெகிழி பொருள்கள் பயன்படுத்தப்படுவதை தவிர்க்கும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டு விசாரணையை ஜூன் மாதத்திற்கு தள்ளிவைத்தனர்.



## ஜெயலலிதா மரணத்தில் கடவுளுக்குத் தெரிந்த உண்மை ஓ.பி.எஸ். மூலம் மக்களுக்கு தெரிந்துள்ளது: சசிகலா

ஆறுமுகசாமி விசாரணை ஆணையத்தில் விசாரணைக்காக அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் கடந்த இரண்டுநாள்களாக ஆஜரானார். இரு நாள்களிலும் சுமார் 9 மணி நேரம் ஓ.பன்னீர்செல்வத்திடம் விசாரணை நடைபெற்றது. விசாரணையில் பரபரப்பான செய்திகளுக்கு வழிவகுக்கும் பல்வேறு வாக்குமூலங்களை அளித்தார்.


பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், ஜெயலலிதா மரணம் குறித்து ஆறுமுகசாமி ஆணையம் கேட்ட கேள்விகளுக்கு உண்மையானபதிலை அளித்துள்ளதாகவும், ஜெயலலிதா மரணத்தில் சசிகலா சதித்திட்டம் தீட்டவில்லை என்றும் தெரிவித்தார்.

இதுகுறித்து சசிகலாவிடம் இன்று ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியிருந்தனர். அவற்றுக்குப் பதிலளித்த அவர், எது உண்மையோ அதை மாற்றவோ, திரையிட்டு மறைக்கவோ முடியாது. மக்களுக்கு உண்மை தெரியவே விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. ஆறுமுகசாமி ஆணையம் அமைக்கப்பட்டபோது நானும் வரவேற்றேன். விசாரணை ஆணையம் மூலமே உண்மை பொதுமக்களுக்கு தெரியவரும்.

ஜெயலலிதா மரணத்தில் கடவுளுக்கு தெரிந்த உண்மை ஓ.பி.எஸ். மூலம் மக்களுக்கு தெரியவந்துள்ளது. என் மீது தனிப்பட்ட முறையில் மரியாதை இருக்கின்றதுஎனஉண்மையை தான் ஓ.பி.எஸ். கூறியுள்ளார்.

அ.தி. மு.க. தரப்பிடமிருந்து இதுவரை எந்த அழைப்பும் வரவில்லை. அழைப்பு வராதது குறித்து எந்த வருத்தமும் இல்லை, என்று அவர் பதிலளித்துள்ளார்.

# மேகதாது விவகாரத்தால் இந்திய ஒருமைப்பாடு தகர்ந்துபோகும் தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் எச்சரிக்கை



மேகதாது விவகாரத்தில் பா.ஜ.க., காங்கிரஸ் கட்சிகளின் அகில இந்தியத் தலைமைகள் கர்நாடகத்தில் உள்ள தங்கள் கட்சியினரின் அடுத்தான போக்கினைக் கண் டித்துத் திருத்தவேண்டும், இல்லையென் றால் இந்திய ஒருமைப்பாடு தகர்ந்துவிடும் என தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பழ.நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில், தமிழ்நாட்டிற்கு காவிரி ஆற்றின் நீர் வருவதை முற்றிலுமாகத் தடுக்கும் வகையில் மேகதாது அணையைக் கட்டுவதற்கு கர்நாடகம் மேற்கொண்டு வரும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஒன்றிய அரசு அதற்கு அனுமதி தரக்கூடாது என வலியுறுத்தியும் தமிழக சட்டமன்றப் பேரவையில் அனைத்துக் கட்சியினரும் ஒன்றிணைந்து தீர்மானம் நிறைவேற்றியிருப்பதை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

காவிரிப் பிரச்சினையில் உச்சநீதிமன்றத் தீர்ப்பையே சிறிதும் மதிக்காமல் கர்நாடகம் செயல்படுவது அரசியல் சட் டத்தையும், கூட்டாட்சித் தத்துவத்தை யும் முற்றிலும் மதிக்காதப் போக்காகும். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்று பட்டுச் செயலாற்றவேண்டிய அவசியத்தை உணர்ந்திருப்பது காவிரி விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஊட்டியுள்ளது. காவிரி, பெரியாறு அணை, பாலாறு, ஈழத் தமிழர் பிரச்சினை போன்றவை எந்தக் கட்சிக்கும் உரிய பிரச்சினையல்ல. ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்கும் பொதுவான பிரச்சினைகளாகும். இதுபோன்ற பிரச்சனைகளிலாவது கட்சி வேறுபாடுகளுக்கப்பால் அனைத்துக் கட்சியினரும் ஒன்றிணைந்து போராடினாலொழிய இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது.

கர்நாடகத்தில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் அவர்கள் காவிரிப் பிரச்சினையில் தமிழகத்தை வஞ்சிப்பதில் ஒருவரையொருவர் மிஞ்சிச் செயல்படுகிறார்கள். கர்நாடகத்தில் அகில இந்தியக் கட்சிகள்தான் மாறி மாறி ஆட்சியில் இருக்கின்றன. காவிரிப் பிரச்சினை உச்சநீதிமன்றத்திற்குச் செல்லும் வரை இக்கட்சிகளின் அகில இந்தியத் தலைமைகள் இதில் தலையிட முடியாமல் இருந்திருக்கலாம். ஆனால், உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பினை வழங்கிய பிறகு கர்நாடகத்தில் உள்ள அகில இந்தியக் கட்சியினர் அத்தீர்ப்பினை மீறிச் செயல்படுவதை அகில இந்தியத் தலைமைகள் வேடிக்கை பார்ப்பது தமிழகத்தை வஞ்சிப்பதாகும்.

பா.ஜ.க., காங்கிரஸ் கட்சிகளின் அகில இந்தியத் தலைமைகள் கர்நாடகத்தில் உள்ள தங்கள் கட்சியினரின் அடாதப் போக்கினைக் கண்டித்துத் திருத்த வேண்டும். இல்லையென்றால் இந்திய ஒருமைப்பாடு குறித்து அகில இந்தியக் கட்சிகளின் தலைமைகள் பேசுவது கேலிக்கூத்தாவதுடன், அதைத் தகர்த்துவிடும் என எச்சரிக்கிறேன், என தெரிவித்துள்ளார்.



# சம்மாந்துறையில் பாலம் அமைப்பு

சம்மாந்துறை, புளக் ஜே – வெஸ்ட் வண்டு வீதியில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளி வாசல், அன்வர் இஸ்மாயில் வித்தியாலயம் மற்றும் மையவாடி என்பவற்றை ஊடறுத்துச் செல்லும் கைகாட்டி பிரதான வாய்க்காலுக்கு மேல் பாலம் அமைக்கும் வேலைத்திட்டம், கல்முனை ரஹ்மத் பவுண்டேன் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு, அமைப்பின் மஷூரா குழுத் தலைவர் அல்ஹாபிழ் எம்.இர்பான் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இத்திட்டத்துக்கு வை.டபிள்யூ.எம்.ஏ. நிறுவனம் முழுமையான அனுசரணை வழங்கி வருவதாகவும் குறுகிய காலத்தினுள் பால நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படும் எனவும் ரஹ்மத் பவுண்டேன் ஸ்தாபகத் தலைவர் ரஹ்மத் மன்சூர் இதன்போது தெரிவித்தார்.

இப்பிரதேச பொது மக்களின் நீண்ட காலத் தேவையாக இருந்து வருகின்ற இப்பாலத்தை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுத்தமைக்காக ரஹ்மத் மன்சூருக்கு இதன்போது நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. விசேடதுஆப் பிரார்த்தனையும் மேற்கொள்ளப்பட்டது.

# மூதூரில் கோவில் நிர்மாண சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி!



மூதூர், மலையடிப்பிள்ளையார் கோவில் நிர்மாணம் தொடர்பாக இருந்து வந்த காணி சர்ச்சைக்கு தற்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இக்கோவில் அமைப்பதற்கான காணி, நேற்றுக் காலை வழங்கி வைக்கப்பட்டது.

மூதூர், 64 ஆம் கட்டை மலையடி பகுதியில் பல வருடங்களுக்கு மேலாக மலையடிப் பிள்ளையார் கோவில் இருந்து வந்தது.

இந்நிலையில், இக் கோவிலை புதிதாகக் கட்டுவதற்கு மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத்தினர் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் முயற்சித்தனர். அப்போது காணிக்கான ஆவணங்கள் இல்லையென மூதூர் பிரதேச செயலாளர் கோவில் நிர்மாணப் பணிகளைத் தற்காலிகமாக தடுத்து நிறுத்தினார்.

இதன் பின்னர் இவ்விடயத்தை ஒட்டி முறுகல் நிலை ஏற்பட்டு, பேச்சுகளும் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில், மூதூர் பிரதேச செயலகக் காணி உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூதூர் பிரிவு அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர் உள்ளிட்டோர் நேற்று வருகைதந்து, மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத்தினர் மற்றும் பொது மக்களுடன் கலந்துரையாடி, காணியை வழங்கி வைத்தனர்.

14 அடி நீளமும், 14 அடி அகலமும் கொண்டதாக மூதூர் மலையடிப் பிள்ளையார் கோவிலை அமைப்பதற்கு காணி கையளிக்கப்பட்டுள்ளதாக ,மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ இ.பாஸ்கரன் குருக்கள் தெரிவித்தார்.

# சம்மாந்துறையில் பத்ரகாளி ஆலயத்தில் சிறப்பாக இடம்பெற்ற எண்ணெய்க்காப்பு

## பக்திபூர்வமாக இன்று கும்பாபிசேகம்


(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற சம்மாந்துறை தமிழ்க்குறிச்சி ஸ்ரீ பத்ரகாளிஅம்பாள் ஆலயத்தின் புனராவர்த்தன மஹா கும்பாபிசேக குடமுழுக்கு பெரும்சாந்தி பெருவிழாவின் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

ஏராளமான பக்தர்கள் வந்து அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் எண்ணெய்க்காப்புச் சாத்தினர்.

கும்பாபிசேஷக பிரதமகுரு சிவாச்சர்யதிலகம் சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் தலைமையில் ஆலயத்தலைவர் சீ.சுப்பிரமணியம் முன்னிலையில் மஹா கும்பாபிசேஷக கிரியைகள் யாவும் நடைபெற்றுவருகிறன.

இம்மஹா கும்பாபிசேக குடமுழுக்கு பெரும் சாந்தி பெருவிழா நேற்றுமுன்தினம் 21ஆம்திகதி



திங்கட்கிழமை வாஸ்துசாந்தி கணபதிஹோமம் உள்ளிட்ட கிரியைகளுடன் ஆரம்பமாகியது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் நேற்று 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இன்று 23ஆம் திகதி புதன்கிழமை 9.51மணி தொடக்கம் 11.03 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிசேகம் பக்திபூர்வமாக நடைபெற்றது.

# போதைப் பொருளுடன் காத்தான்குடியில் ஒருவர் கைது

மட்டக்களப்பு – காத்தான்குடி பொலிஸ் பிரிவில் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மட்டக்களப்பு மாவட்ட குற்றவிசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் வழிகாட்டலில் காத்தான்குடி கடற்கரை வீதியில் நேற்றிரவு 10 மணியளவில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப் பின்போது இவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து9 கிராம் 650 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதான நபர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவிருந்தார்.

# சபாரத்தினத்தின் நினைவாக களுதாவளையில் நிழற்குடை







தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) முன்னாள் தலைவர் ஸ்ரீ சபாரத்தினத்தின் ஞாபகார்த்தமாக மட்டக்களப்பு மண்முனை தென்எருவில் பற்றுப் பிரதேசசபைபிரிவிற்குட்பட்ட களுதாவளை பிரதேசத்தில் பயணிகள் நிழற்குடையொன்று அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது. மண்முனை தென்எருவில் பற்றுப் பிரதேச சபைத் தவிசாளரும் ரெலோவின் மத்திய குழு உறுப்பினருமான ஞா.யோக நாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ரெலோத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், கட்சியின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோ. கருணாகரம் (ஜனா), உபதலைவர் இந்திரகுமார் பிரசன்னா, மட்டக்களப்பு மாநகரசபைப் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், களுதாவளை தேசிய பாடசாலை அதிபர்,ஆசிரியர்கள், மாநகரசபை மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர். களுதாவளை தேசிய பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிரதேச மக்களின் நன்மை கருதி அவர்கள் பயன்பெறும் வகையில் களுதாவளை தேசிய பாடசாலைக்கு அருகாமையில் இப் பயணிகள் நிழற்குடை கட்சியின் சுவிஸ் கிளையின் நிதியுதவியில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உலக டென்னிஸ் வீரர்களுக்கான தரவரிசையில் மீண்டும் நம்பர் முதலிடம் பிடித்த ஜோகோவிச்



இருபது முறை கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்ற செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச் உலக தொழில்முறை ஆடவர் ஒற்றையர் பிரிவு டென்னிஸ் விளையாட்டு வீரர்களுக்கான தரவரிசையில் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார். கடந்த மாதம் அவர் முதலிடத்தை டேனியல் மெட்வடேவிடம் பறிகொடுத்திருந்தார். இருந்தாலும் அண்மையில் முடிந்த இந்தியன் வெல்ஸ் டென்னிஸ் தொடரில் அவர் விளையாடாமலேயே இந்த முறை முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஜோகோவிச், ரோஜர் பெடரர் மற்றும் ரபேல் நடாலை கடந்து முதல் முறையாக முதலிடத்தை கடந்த மாதம் பிடித்திருந்தார் மெட்வடேவ். இருந்தாலும் இந்தியன் வெல்ஸ் தொடரில் அவர் எதிர்கொண்ட வீழ்ச்சி அவரை முதலிடத்தில் இருந்து வெளியேற்றியது. அதன் காரணமாக விளையாடாமலே புள்ளிகளின் அடிப்படையில் ஜோகோவிச் முதலிடம் பிடித்துள்ளார்.

தற்போது ஜோகோவிச் 8465 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். மெட்வடேவ் 8445 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். மூன்றாவது இடத்தில் நடால் இருக்கிறார். நடப்பு ஆண்டில் ஜோகோவிச் இதுவரை ஒரேயொரு டென்னிஸ் தொடரில் மட்டுமே விளையாடியுள்ளார். கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத காரணத்தால் அவரால் முக்கியமான டென்னிஸ் தொடர்களில் விளையாட முடியவில்லை.



# 6 வாரங்கள் டென்னிஸிலிருந்து ஓய்வு ரபேல் நடால் திடீரென அறிவிப்பு

காயம் காரணமாக 6 வாரங்கள் வரை ஓய்வு எடுக்கப்போகின்றேன் என முன்னணி டென்னிஸ் வீரர் ரபேல் நடால் தெரிவித்துள்ளார்.

உலகின் டெனிஸ் தர வரிசையில் மூன்றாம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால், நடப்பு ஆண்டில் தோல்வியைச் சந்திக்காமல் வீறுநடை போட்டு வந்தாலும் அண்மையில் நடந்த இன்டியன் வெல்ஸ் டென்னிஸ் தொடரின் இறுதி ஆட்டத்தில் தோல்விகண்டு ஏமாற்றமளித்தார்.

தொடர்ச்சியாக போட்டிகளில் பங்கேற்ற நடால் காயத்தால் அவதிப்பட்டிருந்தார்.

இடது விலா பகுதியில் உள்ள எலும்பில் விரிசல் ஏற்பட்டிருப்பது மருத்துவப் பரி சோதனையில் தெரியவந்ததையடுத்து 4 முதல் 6 வாரங்கள் ஓய்வு எடுக்கப்போகிறேன் என தற்போது நடால் அறிவித்துள்ளார்.

# சங்கக்கரா, சச்சின் இருவரின் டெஸ்ட் சாதனையை முறியடித்தார் ஆஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித்

150 இன்னிங்ஸ்களுக்கு பிறகு அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் பட்டியலில் குமார் சங்ககரா, சச்சின் டெண்டுல்கர் இருவரையும் கடந்து புதிய சாதனையை படைத்துள்ளார் ஸ்டீவ் ஸ்மித்.

பாகிஸ்தானில்சுற்றுப்பயணம்மேற்கொண்டுஆஸ்திரேலிய அணி டெஸ்ட் தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது. இந்தத் தொடரில் ஆஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். ராவல்பிண்டி மற்றும் கராச்சியில் நடந்த முதல் மற்றும் இரண்டாவது டெஸ்டில் முறையே 78 மற்றும் 72 ஓட்டங்களை எடுத்த அவர். தற்போது லாகூரில் உள்ள கடாபி மைதானத்தில் நடைபெற்று வரும் மூன்றாவது தொடரின் இறுதியுமான டெஸ்ட் போட்டியின்




முதல் இன்னிங்ஸில் 59 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் மிகப்பெரிய சாதனை ஒன்றை படைத்தார் ஸ்டீவ் ஸ்மித். இதுவரை டெஸ்ட் போட்டிகளில் 150 இன்னிங்ஸ்கள் விளையாடி 7,993 ஓட்டங்களை அவர் சேர்த்துள்ளார். இதன்மூலம் 150 இன்னிங்ஸ்களுக்கு பிறகு அதிக ஓட்டங்களை எடுத்து முன்னிலையில் இருந்த குமார் சங்கக்கரா (7,913), சச்சின் டெண்டுல்கர் (7,869) ஆகியோரை முந்தினார் ஸ்மித்.

இந்தப் பட்டியலில் அடுத்தடுத்த இடங்களில் விரேந்திர சேவாக் (7,694), ராகுல் டிராவிட் (7,680) ஆகியோர் உள்ளனர்.

# 25 வயதில் ஓய்வை அறிவித்த ஆஷ்லெ பார்ட்டி உலகின் முதல்நிலை டென்னிஸ் வீராங்கனை




ஆஸ்திரேலிய டென்னிஸ் வீராங்கனை ஆஷ்லெ பார்ட்டி தனது 25ஆவது வயதில் ஓய்வு முடிவை அறிவித்து விளையாட்டு ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளார்.

ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த டென்னிஸ் வீராங்கனை ஆஷ்லெ பார்ட்டி, கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்று இதுவரை 15 சர்வதேச பதக்கங்களை வென்றுள்ளார். 2019 ஆம் ஆண்டு பிரெஞ்ச் ஓபின் போட்டியிலும், 2021 ஆம் ஆண்டு விம்பிள்டன் போட்டியிலும், இரண்டு மாதங்களுக்கு முன்பு ஆஸ்திரேலிய ஓபின் போட்டியிலும் பட்டங்களை வென்றுள்ளார். தொடர்ந்து பல வெற்றிகளை குவித்து வந்த ஆஷ்லெ பார்ட்டி, தனது 25 ஆவது வயதில் ஓய்வு முடிவை அறிவித்து விளையாட்டு ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளார். இது குறித்து வீடியோ பதிவொன்றை வெளியிட்டுள்ள ஆஷ்லெபார்டி, 'தனிப்பட்ட முறையில் எனக்கு பல கனவுகள் உள்ளன. ஆனால், உலகம் முழுவதும் சுற்றி எனது குடும்பத்தையும், சொந்த ஊரையும் பிரிந்திருக்க முடியவில்லை. டென்னிஸ் விளையாட்டை நான் மிகவும் நேசிக்கிறேன். எனது வாழ்வில் அது என்றும் ஒரு அங்கமாக இருக்கும். ஆனால், இனி நான் ஒரு விளையாட்டு வீராங்கனையாக இல்லாமல், ஒருசாதாரண பெண்ணாக வாழ்க்கையை அனுபவிக்க விரும்புகிறேன், என அவர் தெரிவித்துள்ளார்.

# மயில்வாகனபுரம் கொழுந்துப்பிலவு பிரதான வீதி நிரந்தர வீதியாகிறது!

## சிறீதரன் எம்.பி தலைமையில் கலந்துரையாடல்




இயற்கை அனர்த்தங்களின் போது பல ஆண்டுகளாக இன்னல்களை எதிர்நோக்கும் மயில்வாகனபுரம் கொழுந்துப்பிலவு பிரதான வீதி நிரந்தர வீதியாக மாறவுள்ளது.

மேற்படி வீதியானது கரைச்சி பிரதேச சபையால் ரெடப் திட்டத்தினூடாக 19கோடி ரூபா செலவில் அமையவுள்ளது. இந்த வீதியில் அமைந்துள்ள போக்குவரத்துக்கு அபாயமானதாகக் காணப்படும் பாலமும் 15கோடி ரூபா செலவிலும் மீதி 4 கோடி ரூபா செலவில் வீதியும் நிரந்தர வீதியாக மாற்றப்படவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் மயில்வாகனபுரத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் ஜீவராசா, வட்டார அமைப்பாளர்கள் பிரபாஜிதன் குமார் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பரீட்சை வினாத்தாள் கிடைக்காமையால் முல்லைத்தீவு மாணவர்கள் கடும் பாதிப்பு!

முல்லைத்தீவு – தேராவில் தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கான மாகாணமட்ட பரீட்சை வினாத்தாள்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) வழங்கப்படாமையானது தங்களுடைய தவறு என முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்கான மாகாணமட்ட பரீட்சைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட தேராவில் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 11 மற்றும் தரம் 10 மாணவர்களுக்கான மாகாண மட்ட பரீட்சை வினாத்தாள்கள் கிடைக்கப்பெறாத நிலையில் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சமயம் மற்றும் சுகாதாரம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சை வினாத்தாள்கள் கல்வி வலயத்தால் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டு நேற்று பரீட்சைகள் நடைபெற்றன.

ஆனால், தேராவில் வித்தியாலயத்துக்கான பரீட்சை வினாத்தாள்கள் அனுப்பப்படாத நிலையில் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறியமுடிகின்றது.

அதாவது, அதிகாரிகளின் அலட்சியத்தால் இவ்வாறு மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் எனப் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் இந்த விடயம் தொடர்பாக முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, மேற்படி விடயம் தங்களால் இடம்பெற்ற தவறு என்றும், அந்த மாணவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு வேறு பாடசாலையில் பரீட்சை வினாத்தாள்களை பெற்று போட்டோ பிரதி செய்து வழங்கினோம் என தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தற்போதைய மின்சார துண்டிப்பு மற்றும் போட்டோ பிரதி எடுப்பதற்கான தாள்களில் விலையேற்றம் என்பவற்றால் பாதிக்கப்பட்டதுடன் குறித்த பிரதேசத்தில் இருந்து கிட்டத்தட்ட பத்து பதினைந்து கிலோ மீற்றருக்கு அப்பால் சென்று போட்டோ பிரதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய சூழல் காணப்படுவதாகவும் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு பின்தங்கிய பிரதேச பாடசாலைகளில் அதிகாரிகளின் அசமந்தப் போக்கு மற்றும் அக்கறை இன்மை காரணமாக இவ்வாறு மாணவர்களின் கல்வியைப் பெரிதும் பாதிப்படுகின்றது பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# நாடாளுமன்றில் பதில் வழங்கமுடியாத இக்கட்டில் பொறுப்புள்ள அமைச்சர்கள்

ஞானசார தேரர் தலைமையிலான ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ ஆணைக்குழு தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு ஆளும் கட்சியின் நீதியமைச்சரும், வெளியுறவு அமைச்சரும் எவ்வித பதில்களையும் வழங்கமுடியாத இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டனர்.

குறிப்பாக, பயங்கரவாதத் தடுப்புச் சட்ட திருத்தத்தை முன்வைத்த அமைச்சர் ஜி.எல். பீரிஸ், விவாதங்களின் பின்னர், பதிலுரையை வழங்கியபோது, இந்த சூழ்நிலைக்கு முகங்கொடுத்தார்.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உரையாற்றிக்கொண்டிருக்கையில் குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங்கையில் எந்தச் சட்டங்களும் நடை முறைப்படுத்தப்படுவதில்லை என்று குறிப்பிட்டார். நாட்டில் இன்று செயற்பட்டு கொண்டிருக்கும் ஒரே நாடு ஒரே சட்டம் ஆணைக்குழு தமக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்று முழுமையாக சிங்கள மொழியில் அனுப்பப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது அந்த கடிதத்தை அவர் சபையில் காண்பித்தார்.

எனினும், அமைச்சர் பீரிஸோ அல்லது அமைச்சர் அலி சப்ரியோ எவ்வித பதில்களையும் வெளியிடவில்லை.

குறிப்பாக இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதாக கூட அவர்கள் கூறவில்லை.

மாறாக நேற்றைய தினமே நிறைவேற்றப்படவேண்டும் என்ற அடிப்படையில், கொண்டு வரப்பட்ட தமது யோசனை தொடர்பில் அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தமது உரையை தொடர்ந்தார்.

# இந்தியா, சீனாவை அடுத்து ஆஸி அரசிடமும் 20 கோடி டொலர் கடன் கோரியது இலங்கை!

பருப்பு மற்றும் பால்மா இறக்குமதிக்காக ஆஸ்திரேலிய அரசிடம் இருந்து 20 கோடி டொலர் கடன் கோரப்பட்டுள்ளது என நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவால் இந்தக் கடன் தொகை கோரப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.


சீனாவிடம் கோரப்பட்டுள்ள 2.5 பில்லியன் டொலர் கடனில் 1.5 பில்லியன் டொலரை மருந்துகள், அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் கைத்தொழிலுக்கான மூலப்பொருள்கள் இறக்குமதிக்காக செலவிடப்படவுள்ளது.

அத்துடன், 100 கோடி டொலர் கடன் தொகையை, இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பை வலுப்படுத்த பயன்படுத்த எதிர்பார்க்கிறேன் என நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்தார்.

இதேவேளை மூன்று வாரங்களுக்குப் போதுமான எரிபொருள் இலங்கையிடம் கையிருப்பில் உள்ளதாகவும் நிதி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

இந்திய அரசு இதுவரை 50 கோடி அமெரிக்க டொலர்களை எரிபொருள் இறக்குமதிக்காக வழங்கியுள்ளது என்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர்.ஆட்டிகல தெரிவித்தார்.

# தியாக தீபம் திலீபனின் இறுதி வார்த்தைகளை நாடாளுமன்றில் பகிர்ந்துகொண்ட விஜித ஹேரத்!



உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிரிழந்த திலீபன் என்று அழைக்கப்படும் இராசையா பார்த்திபன் கூறிய வார்த்தைகளை தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நாடளுமன்றில் நேற்று (செவ்வாய்க்கிழமை) தெரிவித்திருந்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 1987 செப்ரெம்பர் 26 ஆம் திகதி முதல் 10 நாள்கள் உண்ணாவிரதப் போராட்டத்தின் பின்னர் அவர் உயிரிழந்தார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் வடக்கில் உள்ள வர்களை மட்டுமல்ல, தெற்கில் உள்ளவர் களையும் ஒடுக்கும் என்று திலீபன் அன்று கூறியமை தற்போதும் நினைவிருக்கிறது என நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குறிப்பிட்டார். மேலும் இந்தச் சட்டம் இறுதியில் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் என்பதை அவரது தியாகம் தங்களிடம் கூறியது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதத் தடுப்புச் தற்காலிக ஏற்பாடுகள் திருத்த சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு நேற்று திருத்தங்களுடன் நிறைவேறியது.

குறித்த சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக 86 வாக்குகளும் எதிராக 35 வாக்குகளும் நாடாளுமன்றில் கிடைத்தன.

இதில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் திலீபன் ஆகியோர் ஆதரவாக வழக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.03.2022இல் வெளியிடப்பெற்றது.